முருகப்பெருமான் துணை

**மகான் கல்லுளிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.05.2023,** புதன்கிழமை

1. ஏழைக்கு இரங்கும் அரங்கா
   ஏழ்மையை விரட்டும் தேசிகா
   வாழவைக்க மக்களிடை தயவை
   வளர்க்கும் ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது விடைதிங்கள்
   ஈரைந்து திகதி கணக்கன் வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 10 ம் நாள், 24.05.2023, புதன்கிழமை)

   இயம்புவேன் கல்லுளிச்சித்தர் யானும்
3. யானும் அறிவுரை ஆசிதனை
   உலகமக்கள் நலம்பெற உரைப்பேன்
   ஞானமாக அரங்கன் தருகின்ற
   நன்னெறி சுத்த சன்மார்க்க நெறி
4. நெறிவழி மக்களெல்லாம் வர
   நிலைத்தன்மை கொண்டவர்களாக
   வறுமை விரட்டுகின்ற வண்ணம்
   வரம்பெற்றவர்களாக மாறுவர்
5. மாறுதல் புரிகின்ற அரங்கன்
   மார்க்கமே கலியினில் மக்களுக்கு
   ஆறுதல் தரும் சொர்க்கமாகும்
   அனுகி ஏற்றுப் பின்தொடர
6. தொடரவே வினைகள் விலகும்
   தொடரவே நன்மை பெருகும்
   தொடரவே ஞானம் கூடும்
   தீவினை இல்லா ஞானவானாக
7. ஆகவே மாற்றம் கூடியே
   அகிலத்தில் அற்புதம் நிகழும்
   வகைபட அரங்கன் தேடும்
   வல்லமை கொண்ட ஞானிகளாக

8. ஆகவே தேற்றம் கண்டு
அரங்கன் அவதாரம் வழி
யுகம் மாற்றம் செய்திடுவர்
உயிர் கொலை நீக்கி வாழும்
9. வாழும் உயர் நெறி வருகவருக
வழங்குவேன் எங்கும் தருமம்
காலம் வெல்லும் தயவுடன்
கருணை கூடி வென்றிடுவர்
10. வென்றிடுவர் உலக மாயையை
வினைகளைந்து மீளுகின்ற
சான்றோர்களாக ஞானிகளாக
சகலரும் நல்மாற்றம் கண்டு
11. கண்டுமே உலக மாற்றமதை
கந்தப்பெருமான் ஆசிபட
தொண்டு வழி நிகழ்த்திடுவர்
தெரிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—